கைக்கெட்டாத கைம்மாத்துகள்

அங்கம் 10

கற்பனைத் தொடர்

எழுதுவது: சோழியான்

'அன்பின் சிவா! உங்களுக்கு எதை எப்படி எழுதுவதென்றே தெரிய வில்லை. ரெலிபோனில், ஏதாவது எழுதச் சொன் னீர்கள். நானும் எழுதுவ தாகச் சொல்லி விட்டேன். எழுத உட்கார்ந்தால் என்ன எழுதப் போகிறோம் என்பதே மறந்து விடுகிறது. எழுதுவதற்கு முன்னால் எழுந்த கற்பனைகள், எண்ணங்கள் யாவும் பேனை யைக் கையில் எடுத்ததும் வெறுமையாய் வெண்மையாய் மறைந்து போகின்றன. எனினும் எழுத வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள். என்னில் எரிச்சலாகக்கூட வரும். '

'சிவா! கொழும்புக்கு வந்ததிலிருந்து மனது அமைதியற்ற கடலைப்போல் அலைபாய ஆரம் பித்துவிட்டது. முதன்முதலில் ரெலிபோனில் உங்களின் குரலைக் கேட்டவுடனேயே என் சுயசிந்தனைகள் யாவும் மட்டுப்பட்டுவிட்டன. மறுநாள் கதைத்தபோது உங்களைப்பற்றிய தேடலில் மனம் விழைந்தது.'

'பவளம் சித்தி கடிதத்தில் எழுதினா, 'ரொம்ப நிதானமான பையன். வெட்கப்படாமல் தெளிவான சிந்தனையோடு இருக்கிறான். அவனிடம் ஒழிவு மறைவு இல்லை' என்று.'

'என் மனம் கடிவாளத்தில் இருந்து தப்பிய குதிரையாகத் தங்களை நோக்கிப்பாய ஆரம் பித்து விட்டது. நீங்கள் அனுப்பிய போட்டோ கிடைத்தது. அது முதல் உங்களின் உருவம் போட்டோவில் அல்ல. என் மனதில் ஆழமாகப் பதிந்து விட் டது. நான் உங்களைக் காதலிக்க ஆரம்பித்து விட்டேன் என்று என்னையே ஏமாற்றிக் கொள்ள மாட்டேன். உங்களுடன் சிநேகிதம் ஆகி விட்டேன் என்று வேண்டுமானால் இப்போ தைக்குக் கூறிக் கொள்ளுகிறேன்.'

'வெறும் சிநேகிதம் அல்ல. மனதால் மகிழ்ந்து நினைத்துக் கற்பனைச் சிறக்கைகளை அகல விரித்துப் பறக்க விட்டுக் கற்சிலையாக்கும் போதை கலந்த பேதையாக்கும் சிநேகிதம்.'

'சிவா! பலவீனம் பெண்களுக்கு மட்டும்தானா? ஏன் ஆண்களாகிய உங்களுக்கு இல்லையா? உங்களுக்கு இவ்வாறு எழுதத் தோன்ற வில்லையா? எதையும் தாங்க முடியாத பிறவியா பெண்? இல்லாவிட்டால் என்னால் எப்படி இப்படியெல்லாம் எழுத முடிகிறது? இற்றை வரை பெற்றிராத உணர்வுகள் ஏன் என்னைப் பாதிக்க வேண்டும்? நான் கற்பனையுள் வாழ்க் கையை நோக்க ஆரம்பித்துவிட்டேனா? எந்தன் மனம் நிறைந்த சந்தோசமான கிறுக் கல்கள் இவை. இந்தக் கிறுக்கியின் பேனா வில் முளைத்த வாக்குமூலம். வாழ்க்கையின் வழி தந்த நிம்மதியில் பிறந்த வாக்குமூலம். உங்கள் நிலை எப்படி? சாதாரணமானவை தானா? அல்லது கற்பனைகளில் என்னை விஞ்சி யவராகவா? என் எழுத்துக்களின் இரசி கராகவா? அல்லது இப்படியும் ஒருத்தியா என்று பரிகசிப்பவராகவா? எனக்கு உங்களின் நிலையை ஒழிக்காமல் எழுதுவீர்களா? ஆண் என்ற கர்வத்தை விட்டுக் கீழிறங்கிவந்து உங்கள் எண்ணங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வீர்களா?'

'ஏஜென்சிக்காரன் வந்தான். 'பாஸ்போட் தயாரானதும் பயணம்' என்றான். மொஸ்கோ வந்துதான் உங்கு வரமுடியுமாம். உங்களைச் சந்திக்கப்போகும் அந்த ஆனந்தமயமான நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.'

'அம்மாவை, சகோதரங்களை, பிறந்த மண் ணை, இத்தனை காலம் பார்த்துப் பழகிய முகங்களை எல்லாம் பிரிந்து அந்நியச் சூழலுக்குள் அடைக்கலமாகப் போகிறேன் என்ற கவலை சிலசமயம் கண்களைக் கலங்க வைத்துவிடுகிறது. தலையணையை நனைத்து விடுகிறது. மறுகணமே மனதில் பதிந்த உங்கள் போட்டோ எல்லாத் துயர்களையும் துடைத்தெறிந்து, 'பேதைப் பெண்ணே! ஏன் அழுகிறாய்? வாழ்வில் பிரிவுகள் சகஜம். வாழ வேண்டு மாயின் சில விலையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்' என்று ஆறுதல் கூறி நிற்கும்.'

'நீங்கள் நிச்சயம் பதில்போடுவீர்களா? ரெலி போனில் கதைப்பதிலும் பார்க்க எழுத்துக் கள்தான் நிலையாக நிற்கும். அவைதான் ஒவ்வொருவரையும் நெருக்கமாக்கித் தரம் காட்டும். எழுதுவீர்களா?'

அன்புடன், உங்களின் அகல்யா.'

சிவராசன் வாசித்தான். மீண்டும் வாசிக்கவேண்டும் போலிருந்தது. வாசித்தான். இன்பக் கிளுகிளுப்பு. முதல் அனுபவம். அகல்யா.... அகல்யா.... எங்கும் பரந்து எதிலும் நீக்கமற நிறைந்தாள். கடிதத்தை மடித்து இதழ் பதித்துப் பத்திரப்படுத்தியபோது, அழைப்புமணி அலறியது.

❖ ❖ ❖

துரும்பு தூணாகுமா? ஆகலாம் என்பதை அந்தச் சம்பவம் காட்டி யது. மாதவன் தன்னுடன் பத்துப் பேரைச் சேர்த்துச் சீட்டு நடாத்தினான். ஆளுக்கு ஐநூறு. பத்து மாதம். மொத்தத்தொகை ஐயாயிரம். ஏலச் சீட்டு.

"இண்டைக்கெல்லே சீட்டுக் கூறுறது போகே லையே?' 'ஏதோ தொடங்கிப் போட்டம். ஒப் பேற்றும் வரையும் கஸ்டம்தான். இது ஆறா வது சீட்டு. கேள்வி எக்கச்சக்கமாய் வருமோ தெரியேலை. ஏஜென்சிக்காரன் காசுக்கு நெருக்குறான். சீட்டெடுத்தால்தானே முழுக் காசையும் கொடுத்துத் தொலைக்கலாம்." மனைவியின் தொண தொணப்புத் தாங்காமல் "எனக்குத் தெரியும். திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கொண்டு.... தேத்தண்ணி கொண்டு வா.... இண்டைக்கு ஏலத்தைக் கூட்ட ஆர் வாறானோ தெரியேலை" என்று சலிப் புடன் முணுமுணுத்தார் கனகரத்தினம். தேனீரைப் பருகிவிட்டு மாதவன் வீட்டிற் குச் சென்றார். அங்கே சிவநேசனும் வந்திருந்தார்.

"என்ன சிவநேசர்?"

"சீட்டுக் கேக்கத்தான்!"

"நான் நேத்தைக்கெல்லே சொன்னனான். நான் எடுக்கப் போறன் எண்டு."

"ஓம் கனகு. ஆனால் என்ன செய்யிறது. என க்கும் வீட்டிலை பிரச்சினை. அவசரமாய்க் காசு தேவைப்படுகுது. இண்டைக்குச் சீட்டெடுக் காட்டி மனிசியோடை தப்பேலாது."

"நான் இண்டைக்குச் சீட்டெடுக்கப் போற னெண்டு தெரிஞ்சுதான் வந்திருக்கிறாய்!' என்று சினந்தார் கனகரத்தினம்.

"கனகு. விசர்க்கதை கதையாதை. எனக் கிப்ப காசு தேவை. நீ வேணுமெண்டால் கேள்வியைக் கூட்டிக் கேட்டு எடன்."

"ஓ....நீ கேள்வியைக் கூட்டத்தான் வந்திருக்கிறா யாக்கும்...."

"என்ன. அப்பிடிப்பட்ட ஆள் நானில்லை. என க்குக் காசு தான் முக்கியம் எண்டால் சீதனம் வேண்டாமெண்டு என்ரை சொந்தக்காரப் பொடியனை உங்களிட்டைக் கொண்டந்து தள்ளுவனே?"

"சிவநேசன்! அதுக்கும் இதுக்கும் முடிச்சுப் போடாதை. பெட்டையைக் கூப்பிடத்தான் சீட்டெடுக்க வந்திருக்கிறன்.... நீதான் இப்ப நந்தி மாதிரிக் குறுக்கை நிக்கிறாய்."

"சீதனமில்லாமை மாப்பிள்ளையைக் கொடுத் ததும் பத்தாமை இனி சீட்டு அது இதெண்டு எல்லாத்தையும் விடவேணுமே?"

எகிறிக் குதித்தார் சிவநேசன்.

"உன்ரை சொந்தக்காரப் பொடியன்தான் எங்களுக்கு வேணுமெண்டு இல்லை. இப்பிடி ஆயிரம் பேரை மாப்பிள்ளையாய் எடுக்கலாம். ஏதோ உன்ரை அறிமுகத்தாலை அவனைக் கேட்டம். அதுக்காக அவனைவிட்டால் வேறை ஆள் கிடையாது எண்டு துள்ளாதை!"

"ஓ.... எங்கை இந்தச் சம்பந்தம் நடக்கிற தைப் பாப்பம். நான் நடக்கவிடமாட்டன். நீ வேறை ஆரையாலும் பார்த்துக்கொள். நான் பொடியனுக்கு நல்ல சீதனத்தோடை கட்டி வைப்பன்." கனகரத்தினம் திகைத்துவிட்டார். அங்கே துரும்பு தூணானது. சிறிய விசயம் பெரிய பிரச்சியை ஆனது. நட்பு அஸ்தமன மானது.

'சிவராசனை உடனை பார்க்கவேணும்.' சிவநேசன் மனதிற்குள் கறுவிக்கொண்டார்.

❖ ❖ ❖

சிவநேசனின் திடீர் வருகையை சிவராசன் எதிர்பார்க்கவில்லை. வரவேற்றான். கண்கள் சிவந்திருந்தன. சிறிது குடித்திருப்பார். பிர யாணக் களைப்பாகக்கூட இருக்கலாம்.

சிவநேசன் நேரடியாகவே விசயத்துக்கு வந்தார். இந்தத் திருமணம் வேண்டாம் என்ற போது சிவராசன் திகைத்துவிட்டான்.

"அண்ணை. என்ன விளையாடுறியளே? சும்மா இருந்தவனைக் கலியாணம் எண்டு ஆசைகாட்டிப்போட்டு இப்ப இது நடக்காது எண்டால் எப்பிடி?"

"அட போடா. கலியாணங்களிலை இது சர்வ சாதாரணம். ஒண்டு குழம்பும். இன்னொண்டு சரிவரும். எனக்கு அவையின்ரை போக்குப் பிடிக்கேல்லை. திமிர்.... திமிர்...." என்று கொதிப்புடன் கூறினார் சிவநேசன்.

"கலியாணம் பேசுறது சாதாரணமாய் இருக் கலாம். ஆனால் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்யப்போறம் எண்ட நம்பிக் கையிலை பேசுற பேச்சுக்கள் சாதாரணமா னவை இல்லை. ரெலிபோனிலை அகல்யா வின்ரை மனதிலை ஆசைகளை நம்பிக் கைகளை வளர்த்துப்போட்டு, இப்ப ஏலா தெண்டால் முடியுமே?"

"உந்தச் சினிமா வசனமெல்லாம் என்ன ட்டைக் கதையாதை. இப்ப ரண்டிலை ஒண்டு சொல்லு. என்னை அவமானப்படுத்தின குடும் பத்தோடை சம்பந்தம் வைக்கப் போறியோ இல்லையோ?"

வெட்டொன்று துண்டு இரண்டாகக் கேட் டார் சிவநேசன். அவரது கேள்வி அவனுக் குச் சினத்தை ஏற்படுத்தினாலும் அடக்கிக் கொண்டான்.

"நீங்கள் சொன்னவுடனை வாங்குறதுக்கும் வேண்டாம் எண்டால் தூக்கி எறியுறதுக்கும் இது ஒண்டும் உயிரில்லாத பொருளில்லை. ரண்டு உயிர்கள் சம்பந்தமான இணைப்பு. எங்கையோ பிறந்து எங்கையோ வளர்ந்த முன் பின் தெரியாத அகல்யாவின்ரை அறிமுகத்துக்கு உங்கள் மூலமாய் வாய்ப்புக் கிடைச்சுது. அண்டைக்கு வற்புறுத்தி என்னைச் சம்மதம் கேட்டீங்கள். முடிவெடுக்க வேண்டியவன் நீ எண்டீங்கள். நானும் ஏதோ நடப்பது நடக்கட்டும் எண்டு சம்மதிச்சன். ஆனா இப்ப....? நானும் அவளும் மன தாலை உணர்வுகளாலை ஒருவரையொருவர் புரிஞ்சு நெருங்கி வாற சமயத்திலை எங்கடை உணர்ச்சிகளை எல்லாம் தூக்கிப்போடச் சொல்லுறியள்."

"உங்கள் ரண்டு பேருடைய பிரச்சினைக்காக சம்பந்தப்படாத நாங்கள் ரண்டு பேரும் பாதிக்கப்படுறது எந்தவிதத்திலை நியாயம்? அகல்யா என்னிலை ஒரு எதிர்பார்ப்பை வளர்த்துவிட்டாள். அதுக்கு நான்மட்டும் காரணம் இல்லை. நீங்களும்தான். இப்ப அந்த எதிர்பார்ப்புக்களை இடை நடுவிலை ஏமாற்றங்களாக்கி அவளின்ரை மனதை ஊன மாக்க நான் தயாரில்லை."

உறுதியாகக் கூறியவனை ஆத்திரத்துடன் நோக்கினார் சிவநேசன்.

"ஏதோ உலகத்திலை காணாததைக் கண்டவன்போலை ஆரோ ஒருத்திக்காக என்னையே வெறுக்கத் துணிஞ்சிட்டாய். சிவா! இதுதான் எங்கடை கடைசிச் சந்திப்பு."

என்ன மனிதர் இவர்? மற்றவர்களு டைய விருப்பு வெறுப்புகளைப் பற்றிச் சிறிதும் எண்ணிப்பார்க்காமல் தன் வழியில் மற்றவர்களும் வரவேண்டும் என எதிர்பார்க்கும் சுயநலப் போக்கு. எவ்வளவோ சமாதானம் கூறியும் கேளாமல் கோபமாக வெளியேறினார் சிவநேசன். மனிதர்கள் பலவகை. அதில் இவரும் ஒருவகை.

தொடரும்)

NAG & CO
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS